சென்னையில், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மற்றும் தேசிய மகளிர் ஆணையம் இணைந்து நடத்திய, "பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கையாளும் நிறுவனங்களின் திறன் வளர்ப்பு மற்றும் சேவைகளை ஒருங்கிணைத்தல் குறித்த ஒருநாள் கருத்தரங்கை நேற்று (24.4.2025) அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் ஏ. எஸ். குமரி, ஜெயஸ்ரீ முரளிதரன், ஆர்.லில்லி, வனிதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

முதலமைச்சர் அவர்கள் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டத்திற்கான புதிய வட்டாட்சியர் அலுவலகம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவித்ததிற்கிணங்க, குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள புது சுப்பிரமணிய கோயில் இடத்தில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அமைத்திட பொதுமக்கள் கோரிக்கை வைத்ததிற்கிணங்க, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இவ்விடத்தில் விரைவில் உரிய அனுமதியுடன் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அமைக்கப்படும் என்றார். உடன் பேரூராட்சி தலைவர் கோகிலாகுமார், துணை தலைவர் ராமர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.

### வியாசர்பாடி அம்பேத்கர் கல்லூரி -

# மூலக்கடை வரை உயர்மட்ட மேம்பாலம்!

## சட்டப் பேரவையில் பெரம்பூர் ஆர்.டி.சேகர் கோரிக்கை!

சென்னை,ஏப்.25-

**சட்டப் பேரவையில் உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையில் பெரம்பூர் தொகுதி உறுப்பினர் ஆர்.டி. சேகர் பேசுகையில் வியாசர்பாடி அம்பேத்கர் கல்லூரி - மூலக்கடை வரை உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.**

**சட்டப் பேரவையில் ஆர்.டி.சேகர் பேசியதாவது:**

இன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள். தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும். தமிழினத்திற்காகவும் வாழ்ந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பெயரில், அவர் பிறந்து வளர்ந்த மண்ணில், கும்பகோணத்தில் அவர் பெயரில் பல்கலைக்கழகம் அமையும் என்ற அறிவிப்பை வெளியிட்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Intelligence without ambition is a bird without wings என்று குறிப்பிட்ட ஓர் அறிஞரின் கருத்தின் அடிப்படையில், வாழும் சமூகத்திற்குப் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதற்கு அறிவும். கல்வியும் எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்த நம் திராவிட மாடல் அரசு. இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டக்கூடிய வகையில், பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறை ஆகிய இரு துறைகளிலும் அதிக கவனம் செலுத்தி வருகின்ற நிலையில், இந்தத் துறைகளின் மானியக் கோரிக்கைகள் தொடர்பான விவாதத்தில் தி.மு.க.வின் சார்பில் பங்கேற்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

என்னைப் போன்ற சாமானியர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் உரையாற்றுவதற்குக் காரணமாக இருந்திட்ட, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வரிசையில் வந்த தமிழ்நாட்டின் நவீன சிற்பி, தாழ்ந்த தமிழகத்தை தலைநிமிரச் செய்த தன்மானத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

நீதிக்கட்சியின் வாரிசு என ஓங்கி ஒலித்திட்ட திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர், எங்களை வழிநடத்துகின்ற ஆசான், தமிழக மக்களின் இதய வேந்தர், எல்லோருக்கும் எல்லாம் என்கிற திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கும், சனாதனம் எந்த வடிவத்தில் வந்தாலும், அதை எதிர்த்து நிற்கின்ற, ஆற்றல் வாய்ந்த இளைஞர்களின் எதிர்காலம், பகுத்தறிவுப் பண்பாளர், போற்றுதலுக்குரிய இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கணினி ஆய்வகங்கள்!**

பேராசிரியப்பெருந்தகை அவர்களின் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இதுவரை ரூ.3,527.50கோடிநிதியில், 8,370 புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் விடுதிகள் என்று கட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால்திறந்துவைக்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் அறிவியல் ஆய்வகங்கள், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு ரூ.1,000கோடிநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன்.

நடப்பு நிதியாண்டில் 2,000 பள்ளிகளுக்கு ரூ.160 கோடி மதிப்பீட்டில் கணினி ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பையும், அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயின்று வரும் பள்ளிகளில் உள்ள 880 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் ரூ.56 கோடி மதிப்பீட்டில் தரமுயர்த்தப்படும் என்றும், 2,676 பள்ளிகளில் ரூ.65 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்படும் என்றும் அறிவித்து, இந்த அரசு மாணவர்களைக் கண் போல் காக்கிறது என்பதை மாணவச் செல்வங்கள் மனதில் உணர்ந்துள்ளதுடன், மாணவர்கள் உலகமும் இதனை மனதார வரவேற்கிறது.

கடந்த 2 ஆண்டுகளில், இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களான இந்தியத் தொழில்நுட்பக் கழகம், தேசிய சட்டப் பல்கலைக்கழகம் போன்ற நாட்டின் தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் 780 அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்க்கை பெற்று சிறப்பிடம் பெற்றுள்ளதையும், மேலும் 12 மாணவர்கள் முழுக் கல்வி உதவித் தொகையுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று வருகிறார்கள் என்பதையும் அறிந்து, கற்றறிந்த உலகம் இந்த அரசைப் பாராட்டுகிறது.

Edison Michelangelo Walter Scott செஸ் விளையாட்டை பள்ளிகளில் மேம்படுத்தியதன்மூலம் கடந்த காலங்களில் தமிழ்நாடு இரண்டு உலக சாம்பியன்களையும், 30 கிராண்ட் மாஸ்டர்களையும் பெற்றது என்பது பெரும் சாதனை. ஆனால், இந்த விளையாட்டைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் இணைப்பதன்மூலம் இன்னும் பல உலக சாம்பியன்களையும், கிராண்ட் மாஸ்டர்களையும் எதிர்காலத்தில் தமிழ்நாடு பெறுவதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்துள்ளது. இந்த நேரத்தில், இந்தச் சாதனையின் நாயகன், நம் இளம் தலைவர், தமிழ்நாட்டின் எதிர்காலம் எங்கள் மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களை நன்றியோடு பார்க்கிறேன்.

எழிசனைப் போல் ஒரு விஞ்ஞானியோ, கம்பனைப் போல் ஒரு கவிஞரோ, காந்தியைப் போல் ஒரு தலைவரோ, மைக்கேல் ஏஞ்சலோ போல் ஒரு சிற்பியோ, வால்டர் ஸ்காட் போல் ஒரு நாவலாசிரியரோ நாளை வரவேண்டுமென்று சொன்னால், ஓர் அரசு இத்தகைய முயற்சிகளை எடுக்க வேண்டும். அதைத்தான் இந்த திராவிட மாடல் அரசும் எடுத்துக் கொண்டிருக்கிறது. 20 வகையான பள்ளிப் பிரிவுகளில், 350-க்கு மேற்பட்ட பல்வேறு அகில இந்திய உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உள்ள, கல்வி உதவித்தொகையுடன்கூடிய பட்டப்படிப்பு வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு, நான் முதல்வன் கல்வித் திட்டத்தின்மூலம் தமிழ் நாட்டின் அனைத்து மாணவர்களையும் சென்றடைவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை மனதார வரவேற்கிறேன்.

**நான் முதல்வர் திட்டம்!**

முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, நான் முதல்வன் திட்டத்தின்மூலம் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த சிவச் சந்திரன் அவர்கள் குடிமைப் பணித் தேர்வுகளில் இந்திய அளவில் 23-வது இடத்தையும், தமிழகத்தில் முதல் இடத்தையும் பிடித்திருப்பது மட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தின்கீழ் 50 நபர்கள் தேர்ச்சி பெற்றிருப்பது என்பதுதான் நம் முதலமைச்சர் கொண்டு வந்த திட்டத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

388 ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்துள்ள 500 அரசுப் பள்ளிகளில், உயர் கல்விக் குறித்தான விழிப்புணர்வு மற்றும் சிறப்புப் பள்ளிகள் வழங்கப்படுவதன்மூலம், 500 அரசுப் பள்ளிகள் மட்டுமின்றி, அருகிலுள்ள இதர அரசுப் பள்ளி மாணவர்களும் பயனடைவார்கள். இதில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரைப் பயிலும் 1 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் முதற்கட்டத்தில் பயனடைவார்கள் என்பது மகத்தான சாதனையாகும். நான் முதல்வன் கல்லூரி கனவுத் திட்டத்தின்மூலம், குறைந்தது 2,000 அரசுப் பள்ளி மாணவர்கள் இனி ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய அளவில் புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து சிகரம் தொடுவார்கள் எனவும், இதற்காக ரூ.50 கோடி நிதி நிலை அறிக்கையிலே ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பதை மனதார வரவேற்கிறேன். நெருக்க நிதி சூழலிலும் ரூ.2,152 கோடி நிதியினை இழந்தாலும், இரு மொழிக் கொள்கையினை விட்டுத்தர மாட்டோம். மும்மொழிக் கொள்கை திட்டம் மக்களுக்கு ஏற்புடையதல்ல என்கிற உணர்வோடு, திராவிட மாடல் நாயகர் முதல்வர் அவர்கள், தான் கொண்டக் கொள்கையில் உறுதியாக இருக்கிறார்கள். இன்று பா.ஜ.க. ஆளும் மராட்டிய மாநிலம் அரசு இந்த மும்மொழி திட்டத்திலிருந்து பின்வாங்குகிற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. ஆக, நம்முடைய முதல்வர் அவர்களின் முயற்சி, இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டுகிறது என்பதற்கு இதுவே ஒரு நல்லச் சான்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பாதையைத் தேடுகிறவர்களுக்கு இரண்டுக் கண்கள் தான், பாதையை உறுவாக்குகிறவர்களுக்கு 2,000 கண்கள் எனக் கூட்டிய அடிப்படையில், நம் முதல்வர் அவர்களின் பயணம் மக்களுக்கானதாக இருப்பதை இங்கு பெருமையோடு பதிவுச் செய்கிறேன்.

தொடக்கக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து, நம் தலைவர் மக்களின் முதல்வர் அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கும் நான் முதல்வன் திட்டம், கற்றல் இடைவெளியைக் குறைக்க இல்லம் தேடிக் கல்வி என்றெல்லாம், மாணவர்கள் மீது அவர் அதீத அக்கரைக் காட்டுகிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அந்த வகையில் தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரைப் பயிலும் 17.53 இலட்சம் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டத்தை, இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழ்நாட்டில் நம்முடைய திராவிட முதல்வர் அவர்கள் தான் அறிமுகப்படுத்தினார்கள். (மணியடிக்கப் பெற்றது) அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு நகர்புரங்களில் உள்ளப் பள்ளிகளில், மேலும் 3.14 இலட்சம் மாணவர்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 20.6 இலட்சம் மாணவர்கள் பின்வரும் காலங்களில் பயன்பெறுவார்கள் என்ற அறிவிப்பு, மகத்தான வரவேற்பைப் பெற்றிருக்கிறது மாணவர்கள் மத்தியில். ஒன்றிய அரசு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே, பள்ளிக் கல்வித் துறை மற்றும் எழுத்தறிவிற்கு மொத்தம் ஒதுக்கியது, மொத்த Budget-ல் 1 சகவிகிதம்தான்.

**கலைஞர் ஏற்படுத்திய கல்வி புரட்சி!**

ஆனால், நம்முடைய திராவிட மாடல் நாயகர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கிய மொத்தச் சதவிகிதம் 11 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது இமாலயச் சாதனை இது ஒன்றிய அரசை மிஞ்சியச் சாதனையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளியில் வருமை அடையாளங்கள் இல்லை. மாறாக பெறுமை அடையாளமென்று என்றத் தாரக மந்திரத்தின் வழியில் முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலுடன், பள்ளிக் கல்வித் துறையை வழிநடத்தும் நமது அமைச்சர் அவர்கள், பள்ளிகளுக்கு ஆய்வு செய்யச் செல்லுகிற நேரத்தில், அவர் அந்தப் பள்ளி மாணவர்களின் வகுப்புத் தோழராக மாறிவிடுவார்கள். அவர்களோடு அமர்ந்து, அவர்களுடையக் கருத்துக்களைக் கேட்டு, அவர்களுக்கு அறிவுரைச் சொல்லி, அவர் உற்சாகப் படுத்துகிற பணியை மேற்கொண்டிருக்கிற அமைச்சர் அவர்களுடையத் தலைமையிலே இந்தப் பள்ளிக் கல்வித் துறை பெரும் சாதனைகளைப் படைக்குமென்றுச் சொல்லி, தமிழ்நாட்டிலுள்ளப் பல்கலைக்கழகங்களுக்கொல்லம், துணை வேந்தர்களை அரசே நியமிக்கும் என்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலங்களின் உரிமைகளைக் காத்திட்டது மட்டுமல்ல, உயர் கல்வித் துறையில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்திய முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, கல்வியில் புரட்சி ஏற்படுத்தினார். முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தி அதன்மூலம் பயனடைந்த ஒரு பெண்மணியைக் குறித்து, அவையிலே நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நானும் ஒரு. .(மணியடிக்கப் பெற்றது)

நான் படிக்கும் காலத்தில், முதல் பட்டதாரி மாணவருக்கு 5 சதவிகிதம் மதிப்பெண் கொடுத்ததன்மூலம் சட்டக் கல்லூரியில் இடம்பெற்ற மாணவர்தான் இந்த R.D. சேகர் என்பதை இந்த நேரத்திலே பதிவுச் செய்ய விரும்புகிறேன்.

சர்வதேச அடக்குமுறைகளுக்கு எதிராக தன் வாழ்நாள் முழுவதும், தன்னுடைய நாட்டின் உரிமைகளை மீட்பதற்கு போராடி, கியூபா என்ற வரலாற்று நாட்டின் தந்தையாகப் போற்றப்பட்ட, Fidel Castro போல், இன்று இந்திய ஒன்றியத்தில் சர்வாதிகாரம் என்னும் இருள், மாநில வாரியான மொழி உரிமைகளைப் பறித்து அடக்குமுறைகளேன்னும் ஒற்றைக்குடையின்கீழ் பல்வேறு மொழிகளின் இனங்களால் இந்திய ஒன்றியத்தில் வாழ்கிற மாநிலங்களின்மீது திணிக்க நினைக்கின்ற ஒன்றிய அரசின் சர்வாதிகாரத்திற்கு எதிராக மாநில உரிமைகளின் முதல் குரலாய் இந்தியோடு திணறிக்கொண்டு, எதிர்த்து நிற்கிற பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிறத் தலைவராக, தமிழ் மண்ணிலிருந்து அனைவரையிம் வழிநடத்துகிற நெஞ்சுரத்தோடு நின்று,

சர்வாதிகாரத்தை எதிர்த்து நின்று போராடுகின்ற தலைவனாக, நம்மை, இந்த நாட்டை வழிநடத்துகிற திராவிட மாடல் நாயகர் மக்கள் முதல்வர் அவர்களுடைய கரத்தை வலுப்படுத்த தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்ற உணர்வோடு எனது உரையை நிறைவு செய்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஐம்பது ஆண்டுகாலமாக நிறைவேற்றப்பட முடியாமல் இருந்த வியாசர்பாடி மேம்பாலம் கட்டும் பணியையும், கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகத்தை சீரமைக்கும் பணியையும் முதலமைச்சர் அவர்கள் இந்த நான்கு ஆண்டுகாலத்தில் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும், என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற பணிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய சுமார் 2.3 தொகுதிக் கோரிக்கைகளை நான் படித்தாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டு, அவற்றை தங்களிடம் அளிக்கிறேன்.

எனக்கு முன்னால் உரையாற்றிய மூத்த உறுப்பினர் அண்ணன் அவர்கள், அரசு ஊழியர்கள் பற்றியெல்லாம் சொன்னார்கள். எங்களுக்கும் நினைவிருக்கிறது; எஸ்மா, டெஸ்மா ஆகியவற்றை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மறந்துவிட மாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்து, அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**தொகுதி கோரிக்கைகள்:**

பெரம்பூர் தொகுதியில் அனைத்து வசதிகளுடன்கூடிய தாய்-சேய் நல மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும். மூலக்கடை வரையிலுள்ள மெட்ரோ இரயில் வழித்தடத்தை பெரம்பூர் தொகுதி இ.எச். ரோடு வழியாக நீட்டித்து தங்கச் சாலை மெட்ரோ இரயில் நிலையத்துடன் இணைத்திட வேண்டும். பெரம்பூர் தொகுதி. பேசின் பாலத்தை அகலப்படுத்த வேண்டும். பெரம்பூர் தொகுதி. வியாசர்பாடி அம்பேத்கர் கலை கல்லூரியிலிருந்து-மூலக்கடை வரை உயர் மட்ட மேம்பாலம் அமைத்து தர வேண்டும்.

இவ்வாறு ஆர்.டி.சேகர் பேசினார்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# "அன்னம் தரும் அமுதகரம்" - 64வது நாள்!

## கொளத்தூர் மேற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஏப்.25-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 64 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (24.4.2025) கொளத்தூர் மேற்கு பகுதி: 1)வட்டம் 64அ - 42வது தெரு சந்திப்பு, G.K.M காலனி, சென்னை. 2) வட்டம் 64 -மக்காராம் தோட்டம், முதல்வர் மருந்தகம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், கே.சாரதா, டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### "கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்" என அறிவித்த

# நமது முதலமைச்சர் நூறாண்டு காலம் வாழ்க!

## சட்டப்பேரவையில் – கும்பகோணம் க.அன்பழகன் பேச்சு!

சென்னை, ஏப்.25-

"கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என அறிவித்த நமது முதலமைச்சர் நூறாண்டு காலம் வாழ்க!" என்று, சட்டப்பேரவையில் பேசிய கும்பகோணம் தொகுதி கழக எம்.எல்.ஏ., சாக்கோட்டை க. அன்பழகன் குறிப்பிட்டார்.

அவர் பேசியதாவது: -

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், கும்பகோணத்தின் அத்தனை தெருக்களிலும் நடந்து இந்த இயக்கத்தை வளர்த்த பெருமைக்குரியவர். எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்தாலும்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், வாழ் நாளில் தான் போடுகிற திட்டங்களை ஏழையெளிய மக்கள் பார்த்து வளர்ந்து, அதை அனுபவிக்கிறதை பார்த்து மறைந்த

ஒரே தலைவர் நம்முடைய மரியாதைக்குரிய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

தலைவர் கலைஞருக்கு, முன் வரிசையில் உள்ள தலைவர்கள் அனைவரும் பாராட்டி, அடுக்கடுக்காக அவருடைய பல்வேறு பணிகளை எடுத்து வைத்திருக்கிற நெகிழ்ச்சியில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கல்விக்கென்று இன்றைக்கு இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் நம்முடைய தமிழ்நாடு மட்டும்தான் 58% உயர்கல்வி இருக்கிறதென்று சொன்னால், அதற்கு வித்திட்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர். அவர் பெயரில் கும்பகோண மாநகருக்கு பல்கலைக்கழகம் அமைத்துக் கொடுத்திருக்கிற முதலமைச்சர் அவர்கள்.

"நூறாண்டு காலம் வாழ்க
நோய் நொடி இல்லாமல் வளர்க
ஊராண்ட மன்னன் புகழ் போலே
உலகாண்ட புலவர் தமிழ் போலே
நூறாண்டு காலம் வாழ்க
நம் முதலமைச்சர் நூறாண்டு காலம் வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க"
(மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் பேசினார்.

### ஹைதராபாத் மாநகராட்சியில் குப்பைக் கழிவுகளிலிருந்து

# எரிபொருள் தயாரிக்கும் ஆலையின் செயல்பாடுகள்!

## மேயர் பிரியா தலைமையில் உயர் அதிகாரிகள் குழு நேரில் பார்வையிட்டனர்!

ஹைதராபாத்,ஏப்.25-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 6,150 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, திடக்கழிவு மேலாண்மையின் ஒரு பகுதியாக, கொடுங்கையூரில் குப்பை கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலை நிறுவப்படவுள்ளது. இதனையொட்டி, இந்த ஆலையின் செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தெலுங்கானா மாநிலம், பெருநகர ஹைதராபாத் மாநகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் குப்பை கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலையினை பார்வையிடுவதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையிலான குழுவினர் நேற்று (24.04.2025) ஹைதராபாத்திற்கு பயணம் மேற்கொண்டு, திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைப் பார்வையிட்டனர்.

முதற்கட்டமாக, பெருநகர ஹைதராபாத் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் குறித்தும் மாநகராட்சி ஆணையாளர் கே. இளம்பரிதி, , மற்றும் அலுவலர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சேகரமாகும் குப்பைகள் ஹைதராபாத், ஜெகத்கிரிகுட்டாவில் உள்ள திடக்கழிவு செயலாக்க மையத்திற்கு கொண்டு செல்லப்ப ட்டு, குப்பை கழிவுகள் சிப்பங்களாக மாற்றப்பட்டு, ஜவகர் நகரில் உள்ள குப்பைகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலைக்கு அனுப்பப்படும் பணிகளைப் பார்வையிட்டனர்.

பின்னர், ஹைதராபாத் ஜவஹர் நகரில் அமைக்கப்பட்டுள்ள குப்பை கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலையின் செயல்பாடுகள் முழுவதையும் நேரில் பார்வையிட்டனர். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் பார்வையிட்டனர். இங்குள்ள கட்டுப்பாட்டு அறை, குப்பைகளை எரிபொருளாக்கும் ஆலையின் செயல்பாடுகள்உள்ளிட்ட தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளையும் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து, ஹைதராபாத் மாநகராட்சியின் திடக்கழிவு மேலா ண்மை அலுவலர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, இந்த ஆலையின் செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடி கேட்டறிந்தனர்.

இந்நிகழ்வுகளில், மதிப்பிற்குரிய துணை மேயர் மகேஷ்குமார், ஆணையர் ஜெ. குமரகுருபரன், , கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) வி. ஜெய சந்திர பானு ரெட்டி, , தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ. பாலச்சந்தர், , நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் ஆர். ஜெயராமன், சு.. ஜீவன், ஜெ. டில்லிபாபு திருமதி எம். ரேணுகா, ந. அதியமான், திருமதி மோ. குணசுந்தரி, டாக்டர் பூர்ணிமா மற்றும் சென்னை ஹைதராபாத் மாநகராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

### கண்ணகுறுக்கை அருகே 2 மேல்நிலைப் பள்ளிகள்

# மாணவர்களுக்கான விடுதி அமைத்துதரப்படுமா?

## சட்டப்பேரவையில் செங்கம் மு.பெ.கிரி கேள்வி!

சென்னை, ஏப்.25-

சட்டப்பேரவையில் கேள்வி நேர்த்தின்போது உறுப்பினர் மு.பெ.கிரி கேட்ட கேள்வியும் அமைச்ச்ர சிவ. வீ. மெய்யநாதன் அளித்த பதிலும் வருமாறு:

**மு.பெ. கிரி:** செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கண்ணகுறுக்கை கிராமத்தில் கோளாப்பாடியும், கண்ணகுறுக்கையும் அருகருகே இருக்கிறது. அங்கே 2 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே ஆய்வுப் பணிகள், நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று கொண்